<u>பவானி நகராட்சி (ஈரோடு மாவட்டம்) 05.01.2023-ம் தேதி வியாழக்கிழமை நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்</u>

**பொருள் எண்: 1**

கோவை, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் ந.க.எண் 754/2018/அ3 நாள் 7.12.2022-ன்படி, 2023ம் ஆண்டுபணியிலிருந்து ஓய்வு பெற உள்ள பணியாளர்களுக்கு 21.12.2022 முதல் 23.12.2022 வரையில் மூன்று நாட்களுக்கு பணி ஓய்வு குறித்து திட்டமிடுதல் பயிற்சி வழங்கப்படஉள்ளதாகவும், இப்பயிற்சியில் பவானி நகராட்சியில் 30.04.2023யில் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வுபெற உள்ள வருவாய் ஆய்வாளர் திரு.S.ரவி அவர்கள் கலந்து கொள்ளவும் அதற்கான பயிற்சிகட்டணம் ரூ.3,000/- செலுத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பயிற்சி கட்டணம் ரூ.3,000/-யை செலுத்த நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

.

**அலுவலக குறிப்பு:**

அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 159</u> அனுமதிக்கப்பட்டது** (ந.க.எண். 1153/2022/சி1)

**பொருள் எண்: 2**

பவானி நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு ( OOF ) தொடர்ந்து அத்தகைய நிலையயை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலை (ODF+) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்க்கொண்டு வருகிறது. இதற்கு பொதுமக்கள் இந்நகராட்சிக்கு ( ODF+ ) சான்று மற்றும் நட்சத்திர தரச்சான்று (Garbage Free City) பெறுவது தொடர்பான ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் இருப்பின் ஆணையாளர் பவானி நகராட்சி அவர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்க இரண்டு தமிழ் நாளிதழ்கள் வெளியிடப்பட்டதில், பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை என்பதாலும், மத்திய மாநில அரசு வழிகாட்டுதலின்படி பவாளி நகராட்சியினை திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி (ODF+) மற்றும் நட்சத்திர தரச்சான்று (Garbage Free City) என அறிவிக்கை செய்யலாம் என்பதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இது தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.
3. தினகரன் மற்றும் மாலை முரசு நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டமைக்கான செலவினம் ரூ.10100/-ற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 160</u> அனுமதிக்கப்பட்டது** (ந.க.எண்.1093/2021/எச்1)

**பொருள் எண்: 3**

பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 50 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

வெளிப்பணி ஒப்படைப்பு முறை 30.12.2022ஆம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. மேலும், ஒரு மாதத்திற்கு அதாவது 01.01.2023 முதல் 31.01.2023 வரை காலநீட்டிப்பு செய்வதற்கும், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களுக்கு பணி ஆணை வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்ற அனுமதிக்கலாம்.

2. நகர்மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம் **மன்றத்தீர்மான எண் : 161 அனுமதிக்கப்பட்டது** ( ந.க.எண்:2255/2015/எச்1.)

**பொருள் எண்: 4**

நகர்மன்ற தலைவர் அவர்களின் அறையினை மராமத்து பணி செய்து நவீனபடுத்துதல் பணிக்கு மதிப்பீட்டு ரூ.4.80 லட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 125 நாள் 20.10.2022யில் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 08.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s பி. பார்த்தசாரதி இன்ஜினியரிங் காண்ட்ராக்டர்ஸ், கோயம்முத்தூர் | ரூ.4.80 | 0.09 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s ஸ்ரீ பெரியாண்டிச்சி அம்மன் கன்ஸ்ட்ரக்சன், பவானி | | 1.65 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்றதப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டை விட 0.10% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s பி. பார்த்தசாரதி இன்ஜினியரிங் காண்ட்ராக்டர்ஸ், கோயம்முத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 162 அனுமதிக்கப்பட்டது** (ந.க.எண் 1375/2022/E1)

**பொருள் எண்: 5**

பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களில் ஏற்படும் சிறு பழுதுகளை சரி செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ,4.60 இலட்சத்திற்கு நகர்மன்ற துர்மான எண் 149 நாள் 07.12.2022 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 22.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.பாலசுப்பிரமணின் ஒப்பந்த்தார்ர் | ரூ.4.60 | 0.09 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.பி.ஏ.செல்லப்பன் | | 1.58 % மதிப்பீட்டு விகிதத்தை |

| | ஒப்பந்த்தார்ர் | | விட அதிகம் |
|---|---|---|---|

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்றதப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டை விட 0.09% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு,எஸ்.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 163</u> அனுமதிக்கப்பட்டது** (ந.க.எண் 1898/2022/E1)

**பொருள் எண்: 6**

பவானி நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவிட்-19 தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு தேவையான பணிபாதுகாப்பு உபகரணங்கள் 113 தூய்மை பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்கள், ஓட்டுநர்கள், சுகாதார பிரிவு மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கு ஜனவரி 2023, பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023 ஆகிய மாதங்களுக்கு பின்வரும் விபரப்படி கொள்முதல் செய்து பயன்படுத்த வேண்டி உள்ளது.

மேலும், நகரில் தெருக்கள் மற்றும் சாலையோரங்களில் உள்ள சிறு சிறு களைச்செடிகளை அகற்ற தேவையான ரோடு புஸ்கட்டர், பவர் சா மெஷின் மற்றும் டெங்கு தடுப்பு பணிகளுக்கு தேவைப்படும் Hand Cutter பொருட்களை நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்து தொடர்ந்து நோய் தடுப்பு பணிகளை நல்லமுறையில் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**தேவைப்படும் பொருட்களின் விபரம்:**

| வ. எண் | தேவைப்படும் பாதுகாப்பு உபகரணங்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 3 PLY MASK 18 GSM 3 LAYER | 15000 எண்ணிக்கைகள் |
| 2 | NITRILE HAND GLOVES (One box contains 100 pcs) | 15000 எண்ணிக்கைகள் |
| 3 | ROAD BUSH CUTTER | 1 No |
| 4 | POWER SAW | 1 No |
| 5 | HAND CUTTING TOOL | 1 No |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 164</u> அனுமதிக்கப்பட்டது** (ந.க.எண் 745/2021/H1)

**பொருள் எண்: 7**

நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி அறிவிப்பு 29.11.2022 ல் செய்யப்பட்டது அதன்படி 15.12.2022 -ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி விபரம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகையினம் | பொது ஏலத்தில் கோரப்பட்ட நபர்கள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. | ஒப்பந்த புள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | **புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம்** | 1. ம.கேசவராஜ் த/பெ மருதையன் 101 – தீருநீலகண்டர் வீதி பவானி, **ஏலத்தொகை ரூ.2,76,000/-** | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 2 , சு.சசிக்குமார் த/பெ சுப்பிரமணி | ஒப்பந்த புள்ளி |

| | | | |
|---|---|---|---|
| | | 356 N5 சொக்கராயன்காடு,பவானி<br>ஏலத்தொகை ரூ.2,75,000/- | ரூ.2,20,000/- |
| 2 | **புதிய பேருந்து நிலைய கடை எண் 1** | 1, சு.கார்த்திகேயன் த/பெ சுப்பிரமணியம்<br>191 – பழைய பஸ் ஸ்டேண்டு ரோடு<br>பவானி.<br>ஏலம் கோரவில்லை | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 2 , போ.மீனா க/பெ போஜராஜன்<br>6/1527 யசோதா அப்பார்ட்மெண்ட்<br>கே.கே.நகர், லட்சுமி நகர், பவானி.<br>ஏலம் கோரவில்லை | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 3. ம.கோவிந்தராஜன் த/பெ மனோகரன்<br>6/1527 யசோதா அப்பார்ட்மெண்ட்<br>கே.கே.நகர், லட்சுமி நகர்,பவானி.<br>**ஏலத்தொகை ரூ.12.700/-** | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 4, சு.மகேஸ்குமார் த/பெ சுப்பிரமணியம்<br>374 -1 முனியப்பன் கோவில்வீதி<br>மாணிக்கம் பாளையம் ஈரோடு,<br>ஏலம் கோரவில்லை | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 5. கு,உதயசூரியன் த/பெ குழந்தைசாமி<br>4 – மண்தொழிலாளர் முதல் வீதி<br>பவானி,<br>ஏலம் கோரவில்லை | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 6.மா. பூபதி த/பெ மாதையன்<br>591/D17 காவேரிநகர்<br>கந்தன் பட்டறை பின்புறம்<br>பவானி,<br>ஏலம் கோரவில்லை | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 7, சஞ்சய் த/பெ கார்த்திகேயன்<br>191 – பழைய பஸ் ஸ்டேண்டு ரோடு<br>பவானி.<br>ஏலம் கோரவில்லை | ஒப்பந்த புள்ளி ரூ.8,100/- |
| 3 | **புதிய பேருந்து நிலைய கடை எண் 28** | 1, சு.விஜயகாந்த் த/பெ சுபமணியன்<br>44 –பஸ் ஸ்டேண்டு ரோடு<br>பவானி .<br>**ஏலத்தொகை ரூ.8.800/-** | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | 2, கே.சசிக்குமார் த/பெ கிருஷ்ணன்<br>D34-1 சாமசுந்தரபுரம் பவானி .<br>ஏலத்தொகை ரூ.8.700/- | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |

**அலுவலக்குறிப்பு**

**வரிசை எண் 1** , புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம் திரு.ம.கேசவராஜ் த/பெ மருதையன் என்பவர் உயர்ந்தபட்ச ஏலத்தொகை யாக **ரூ..2,75,000/** -ம் கோரியுள்ளார். மூன்றாண்டு

சராசரியைவிட அதிகமாக உள்ளதாலும் உயர்ந்த பட்ச ஏலத்தொகையைவிட அதிகமாக உள்ளதாலும் உறுதி செய்யலாம்.

**வரிசை எண் 2**, புதிய பேருந்து நிலைய கடை எண் 1 ற்கு உர்ந்த பட்ச ஏலத்தொகையாக கோரியுள்ள திரு. ம.கோவிந்தராஜன் த/பெ மனோகரன் என்பவரின்ஏலத்தொகை **ரூ.12,700**/- மூன்றாண்டு சராசரியைவிட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.

**வரிசை எண் 3**, புதிய பேருந்து நிலைய கடை எண் 28 ற்கு உர்ந்த பட்ச ஏலத்தொகையாக கோரியுள்ள திரு. சு.விஜயகாந்த் த/பெ சுபமணியன் என்பவரின்ஏலத்தொகை **ரூ.8.800**/- மூன்றாண்டு சராசரியைவிட அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்

**மன்றத்தீர்மான எண் : 165 அனுமதிக்கப்பட்டது** (ந,க,எண்.1450/2020/அ2)

(ஒம்).E,சிந்தூரி.
தலைவர்,
பவானி நகராட்சி.
/உண்மைநகல்/

ஆணையாளர்(கூ/பொ)
பவானி நகராட்சி.